Registered M. 916

# THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. February 1918. No. 5

*Editor.*—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

# வேதாந்த தீபிகை

ஸம்புடம் 8.] பிங்கள௵ மாசி௴ [ஸஞ்சிகை 5.

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 193
2. நம் முன்னோர்களுடைய த்ருவதேசவாஸம் ... 202
3. ஸ்தோத்ரரத்னம்
ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர் ... 212
4. கடிதங்கள் ... ... ... ... ... 216
5. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம்
ஸ்ரீ. உப. சதுஶ்ஶாஸ்த்ர கல்பதரு ஶேஷாசார்யர் 9
6. ஏழாவது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம் ... 18

PUBLISHED BY THE SECRETARY SRI V. S. SABHA.

K. R. Press, Madras.

*Copy-right reserved.*

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4.

# ஸ்ரீ வேதாந்த தீபிகை.

## இப்பத்ரிகையின் முக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விஶிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

## இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1)- இந்து நேசன் :——————————12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

...............இதில் விசிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதாநம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

## NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர் வேதாந்த தீபிகை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "மானேஜர், வேதாந்த தீபிகை, 11, கேஶவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] பிங்களஸம் மாசிமீ [ஸஞ்சிகை 5.

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததானே - வபுரலககுலாவ்ருதானநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆஸ்திகர்கள் யோசிக்கத்தக்க விஷயங்கள்.**

ஆத்மஸாம்யம் எனப்பட்டது மநுஷ்யர்க்கு மாத்ரம் ஏற்பட்டதன்று. ஆத்மா சேதநனைபடியால் சைதந்ய ஸ்வபாவம் எங்கெங்கு ஜீவகோடிகளில் ப்ரகாசிக்கின்றதோ, அவ்விடங்களில் எல்லாம் ஆத்மாவின் இருப்பை ஒப்புக்கொள்ளவேண்டும். வ்யவஹாரத்தில் சைதந்யப்ரகாசம் ம்ருக பக்ஷி ஸரீஸ்ருபாதிகளுக்குக் கீழ் யோசிக்கப்படவில்லை. ப்ரொபஸர் போஸ் எனப்பட்ட பங்காள பண்டிதர் அந்த ப்ரகாசத்தின் இருப்பை விசேஷ கருவிகளைக்கொண்டு, ஸ்தாவரங்களிலும் பாஷாண லோஹாதிகளிலும் ஸ்தாபித்திருக்கின்றார். அந்த விஷயத்தை நம்முடைய பூர்வருஷிகள் முன்னமே நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். 'அப்ராணவத்ஸு ஸ்வல்பா ஸா ஸ்தாவரேஷு ததோऽதிகா । ஸரீஸ்ருபேஷு தேப்யோऽப்யதிசயேந பதத்ரிஷு' அதாவது: பரமாத்மாவினுடைய க்ஷேத்ரஜ்ஞ சக்தி

எனப்பட்ட ஜீவாத்மா, தம்மில் ப்ராணனுடைய ஸத்பாவத்தைக் காட்டமாட்டாத மிலா காஷ்டாதிகளில் ஸ்வல்பப்ரகாசத்துடனும், ஸ்தாவரங்களில் இன்னும் அதிக ப்ரகாசத்துடனும், ஊர்கின்ற ப்ராணிகளில் ஸ்தாவரங்களைக் காட்டிலும் அதிகமான அபி வ்யக்தியுடனும், பக்ஷிகளில் இன்னும் அதிகமான ஜ்ஞாநரூப ப்ர காசத்துடனும் இருக்கின்றாள்; என்பது மேலெடுத்த ஸ்ரீ விஷ்ணு புராண ச்லோக தாத்பர்யம். ஜீவனுடைய ஸத்பாவமானது அவனுடைய முக்ய தர்மமான ஜ்ஞாநத்தின் ப்ரகாசத்தால் அநு மிக்கத்தக்கது. இவ்வண்ணம் பேதிக்கின்ற சரீரங்களில் தாரதம் யத்தோடு ஜ்ஞாநம் ப்ரகாசிப்பதற்குக் காரணம் என்னென்றால், ஜ்ஞாநாநந்தாதிகளால் ஸமனான ஒவ்வொரு ஜீவனும் அந்தந்த சரீரங்களுடைய சேர்க்கைக்கு அநுகுணமாகத் தனது ஜ்ஞாந மாகின்ற குணத்தை ப்ரகாசிக்கச் செய்கின்றான். ஆதலால் ஜ்ஞா நத்தினுடைய ப்ரகாச பேதம், சரீரபேதத்தைப் பொறுத்து நிற் கின்றது.

மநுஷ்யர்க்கெல்லாம் சரீராவயவங்கள் ஸமமாயிருக்கின்றபடி யால், மநுஷ்யர்க்குள் ஸாம்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென் பர் பாச்சாத்யவித்யாபரிசயமுள்ளவர்கள். அவர்கள் யாவர்க் கும் ஜ்ஞாந ஸம்பாதநத்துக்கும், அர்த்த ஸம்பாதநத்துக்கும், ஸுகாநுபவத்துக்கும் ஸமாநாவகாசத்தை வேண்டுகின்றார்கள். இதை ஸநாதந தர்மாபிமாநிகள் ஒப்புக்கொள்ளவேண்டியதே. ஆகிலும் பிறப்பால் சிலர்க்கு உண்டான அவகாசம் மற்றோர்க்கு ஏற்படாது. அர்த்தம் பெருத்தவர்க்குள்ள அவகாசம் ஏழை ஜநங் கட்குக் கிட்டமாட்டாது. நம்முடைய தேசத்தில் பெரிய உத் யோகங்களுக்கும், வர்த்தகம் முதலானவற்றிற்கும் ஐரோப்யர் க்கு உள்ள அவகாசம் தேசஸ்தர்க்குக் கிடையாது. அர்த்தாதிக் யத்தால் போகாநுபவத்திற்கு ஏற்படும் அவகாசம், ரிக்தர்க்குக் கிடையாது. வைதிகர் க்ருஹங்களில் பிறந்தவர்களுக்கு வேதாப் யாஸத்துக்கும் வைதிக தர்மாநுஷ்டாநத்துக்கும் நேரிட்ட அவ காசம் முதலிமார் பிள்ளைகளுக்கு உண்டாகாது. இந்த ரூப மான வ்யத்யாஸங்கள் லோகத்தைவிட்டு அகலமாட்டா. ராஜாங் கத்தார் யாவத் ப்ரஜைகளுக்கும் ஸமமாகப் பாடசாலைகள் ஏற் படுத்துகின்றார்கள். அவற்றின் ப்ரயோஜநத்தை யாவரும் ஸம மாக அடைவதில்லை, அடையாதவன் தனக்கு அவகாசம் அற்

றுப்போனதாக முறையிட்டுக்கொண்டு, படிப்பில் வ்ருத்தியடைபவர்களைப் பழித்தல் மிகவும் நிந்திக்கத்தக்க விஷயம். ஆதலால் ஸமாநாவகாசம் என்பது எல்லையற்ற தன்று. இருக்கும் அவகாசத்தைத் தன்பொருட்டு உதவிக்கொள்ளத்தக்க ஸாமக்ரியுடையவர்கள் எல்லோரும் அதை உதவிக்கொள்ள வேண்டிய ஸ்திதியானது நிலைத்தால் போதுமானது. இதன்மேல் ஒருவனுடைய அபேக்ஷையானது மேற்பட்டால் அது நிறைவேறமாட்டாது. இங்கிலீஷ் ராஜாங்கத்தில், மேலே விவரித்தபடியே, ஸாமாந்ய வித்யா க்ரஹணத்துக்கும், அர்த்தார்ஜநத்துக்கும், ஸுகாநுபவத்துக்கும் எல்லா ஜநங்களுக்கும் ஸமாநாவகாசம் உண்டு. அதைத் தங்கள் பொருட்டு ப்ரயோஜநவத்தாகச் செய்துகொள்ளாதவர்கள், செய்துகொண்டவர்களை த்வேஷிப்பது தத்காலத்தின் கொடுமை.

வேதாப்யாஸமும் வைதிக தர்மாநுஷ்டாநமும் ஆர்யர்க்கு உடையன. அநார்ய ஜநங்கள் தமக்குரிய தர்மாநுஷ்டாநங்களால் ஐஹிகத்தில் அடைகின்ற பலத்துக்கு மேற்பட்ட யாதொரு பலத்தையும் ஆர்யர் ஸ்வதர்மாநுஷ்டாநத்தால் அடைகின்றாரில்லை. ஆர்யமத மென்பது, ஆர்யாசார்யர்கள் ப்ரயத்நத்தால் ஆர்யர்க்கும் அநார்யர்க்கும் பொதுவாக இருக்கின்றது. வேதாந்தம், வைஷ்ணவம், சைவம் முதலான ஆர்ய ஸம்ப்ரதாயங்கள் எல்லா வர்ணத்தார்க்கும் பொதுவாய் இருக்கின்றன. இவற்றைத் தெளிவாகத் தெரிவிக்கின்ற க்ரந்தங்கள் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், இதர பாஷைகளிலும் யாவரும் படிக்கத்தக்க நிலையில் இருக்கின்றன. ‘ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி’ என்கிறபடியே, முமுக்ஷுவான ஒவ்வொரு புருஷனும் தன்னுடைய ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தை அநுஷ்டாந பர்யவஸாயியாகப் பண்ணிக்கொண்டு, தனது நிஷ்டைக்கு அங்கமாக ஸ்வதர்மங்களைப் பகவதாராதநமாகச் செய்யவேண்டும். ஆர்யஜநங்கள், பூர்வ பார்ஸிகளையும் யூதர்களையும்போல, ப்ரதமதில் ஸ்வமதத்தைத் தங்களுக்காக ரக்ஷித்தவர்கள்; அபௌருஷேய மென்றும் அநாதியென்றும் அவர்களால் விஸ்வஸிக்கப்பட்ட வேதங்களைப் பரர்க்குக் கற்பித்தாரில்லை. ஸ்வஜநங்களுக்குள்ளும் உபநயநம் இல்லாதவர்க்கு வேதங்களைச் சொன்னார்களில்லை. அவற்றை ரஹஸ்யமாகவெண்ணி, ஆசார்ய சிஷ்ய க்ரமத்தில் அவர்கள் காப்பாற்றிக்கொண்டு வந்தார்கள். அவர்களுடைய பரமாசார்யர்களான ருஷி

களுடைய கட்டளையைக்கொண்டும், அபசூத்ராதிகரண ந்யாயப் படி வேதவிதிகளின்படியும், அநார்யர்க்கு வேதோபதேசம் செய்ய அவர்கள் தடைபட்டு நின்ருர்கள். ஆனல் காலக்ரமத்தில் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு வைதிக ஸம்ப்ரதாயங்களை அநார்ய ஜநங்களுக்கு உபதேசித்தார்கள். இந்தியாவில் வஸித்த ஹிந்துக்களெனப்பட்ட ஜநங்கள் வழிபடும் மதம் ஆர்யமதமொன்றே. அம்மதத்தினுடைய உண்மைகள் யாவர்க்கும் பொதுவே. அவை உபநிஷத்திலும், கீதையிலும், இதிஹாஸ புராணங்களிலும் வெளிப்படுத்தப்பட்டன. வேதபாகங்களை மாத்ரம், ஆர்யர் அநார்யர்க்கு முன்னே விவரிக்கப்பட்ட க்ரமத்தில் வெளிப்படுத்தத் தடைப்பட்டிருக்கிருர்கள். அவை யாவும் அச்சிடப்பட்டன. ப்ராஹ்மணர் ஸஹகரிக்காமல் அது நடந்திருக்கமாட்டாது. அவ்வண்ணம் ரஹஸ்யங்களை வெளியிட்ட ப்ராஹ்மணர்கள் வைதிக ஸம்ப்ரதாயப்படி மஹர்ஷிகளுடைய உபதேசங்களை மீறிநடந்தார்களோ வென்பதை அவ்வவர் அந்தராத்மாவின் ஸாக்ஷ்யத்தால் நிஷ்கர்ஷித்துக்கொள்ளவேண்டும்.

வேதத்தின் அபௌருஷேயத்வத்தை ஒப்பாத ஜநங்களும், டிலக் போன்றவர்களுடைய யோசனையின்படி, அதன் அநாதிமத்வத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். த்வேஷத்தாலும், காரணமற்ற யோசனைகளாலும், வேதங்களின் ஆவிர்பாவ காலத்தைக் குறைக்கின்ற ஜநங்கள், தாங்கள் சரித்ரத்தை ரக்ஷிப்பதாகச் சொல்லிக்கொண்டே அதை நாசம்செய்கின்ருர்கள். ஈஜிப்ட், சால்டியா, அஸிரியா, ஐரான் முதலான நாடுகளில், சரித்ரகாலமாக ஒப்புக்கொள்ளப்பட்ட முன்னுள்களில் பரவியிருந்த மதங்களும் நாகரிகங்களும் வேரற்றுப்போயின. அவற்றின் சிற்சில அம்சங்களைத் திரட்டி ஒன்ருக்கப்பட்டது யூதர் மதமும் நாகரிகமும். அவற்றின் கிளைகள் கிறிஸ்தவ மதமும் மஹம்மதிய மதமும். இவை, ஐரோப்பா கண்டத்திலும் ஆசியா கண்டத்தின் மேற்புறங்களிலும் பரவியிருந்த பூர்வ ஆர்யமதங்கள் யாவையும் நாசம்செய்துவிட்டன. ஆர்யமதங்களின் உத்பத்தி ஸ்தாநம் த்ருவப்ரதேசம். அங்கே கல்பாந்தரங்களில் அம்மதங்களின் மூல ஸம்ப்ரதாயம் ப்ரஜைகளால் அநுஷ்டிக்கப்பட்டது. அந்த மூல ஸம்ப்ரதாயத்தை வேதபாஷையால் ஆர்யர்கள் ரக்ஷித்தார்கள். ஆர்யர்கள் ஸங்க்யையில் பெருகி, வ்ருத்திகளால பேதிக்கின்ற வர்ணங்களில

நிலைத்தபோது, வேதத்தினுடையவும் வைதிக ஸம்ப்ரதாயத்தினுடையவும் ரக்ஷணை ப்ராஹ்மணர்க்குள் நிலைத்தது. வர்ணாச்ரம வ்யவஸ்தையில்லாவிட்டால், அவை ரக்ஷிக்கப்பட்டிருக்கமாட்டா. அந்த வ்யவஸ்தைகள் கெட்டால் அவற்றிற்கும் ஸ்வரூபநாசம் நியமேந நேரிட்டுவிடும்.

ஆதலால் வர்ணாச்ரம வ்யவஸ்தை முற்றிலும் கெடுவதை மற்றவர்களைப் போல் நாம் ஒப்புக்கொள்ளத் தடைப்பட்டிருக்கின்றோம். வேதங்களினுடைய சப்தாநுபூர்வியும், வர்ணஸ்வரங்களும், மந்த்ரங்களுடைய ப்ரயோகங்களும், வைதிக கர்மங்களும், அவற்றிற்கு அவச்யமாயிருக்கின்ற ஆசாரங்களும், இவற்றை ப்ரகாசிக்கச்செய்கின்ற அங்கங்களெனப்பட்ட சாஸ்த்ரங்களும், அவற்றைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவர்களும், தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ருஷிகளுக்கும் கடமைப்பட்டவர்களுமாய் எண்ணப்பட்ட ப்ராஹ்மணர்களுடையவும், அவர்களுக்கு ஸஹாய பூதர்களாயிருந்த க்ஷத்ரிய வைச்யர்களுடையவும், ஸ்வரூப நாசத்தால் நாசத்தை அடைந்துபோம். அவற்றின் ரக்ஷணம் தம்மைச் சேர்ந்ததென்றும், அவற்றின் ஸ்வரூப த்யாகம் ப்ரபல ப்ரத்யவாயகர மென்றும் விச்வஸிக்கின்ற ப்ரஹ்மகுல ப்ரஸூதர்கள் ஸ்வ வர்ணத்தையும், அதனுடன் சேர்ந்த ஆச்ரமங்களையும், அவற்றின் தர்மங்களையும் தேசகால வைகுண்யங்களை யோசித்து யதாசக்தி காப்பாற்றவேண்டியவர்களே.

"வேதங்களும், அவற்றின் அங்கங்களும் அச்சிடப்பட்டன; ஆதலால், வர்ணஸ்வரம் தவறாமல் அவற்றைக் காப்பாற்ற வேண்டிய அவச்யமில்லை; வேத தேவதைகள் இருப்பை ருஜுப்படுத்த முடியாது; அவர்கள் பூஜைபான யாகங்கள் லோகஹிதமாகத் தெரியவில்லை; யாகக்ரியைகளால் த்ருஷ்டப்ரயோஜநங்கள் காண்கின்றோமில்லை; ஆதலால் வைதிக ஸம்ப்ரதாயம் அழிந்து போவதால் நஷ்டமில்லை;" என்று இவ்வண்ணம் சொல்வாருமுண்டு.

பரலோகத்தின் இருப்பு ருஜுவுக்கு வராது; ஈச்வராஸ்தித்வமும் ருஜுவுக்கு வரமாட்டாது. ஆதலால் இவற்றை நம்பாமல் விட வேண்டுமென்று சொல்பவர், தேவர்களையும், அவர்களுடைய ஆராதந ரூபமான யாகங்களையும் நம்பாமல் விடச்சொல்லலாம். பரலோக ஸம்பந்தமாக யாதேனுமோர் ப்ரமாணத்தை

ஒப்புக்கொள்பவன் ந்யாயமாக வேதப்ராமாண்யத்தையும் அங்கீக ரிக்கத்தக்கவன்.

மதாந்தரஸ்தர்களான பண்டிதமாநிகள் ஸ்வமத தோஷங் களைப் பராமர்சிக்காமலே தத்துல்ய தோஷங்களை வைதிக ஸம்ப்ரதாயங்களில் எடுத்துக்காட்டிப் பூர்வ ஆர்யர்கள் உபாஸி த்த தேவதைகள் யாவும், அவர்களுடைய மநோகல்பித மென்று சொல்வார்கள். மநுஷ்யர்களுடைய இஷ்ட ப்ராப்தியோ அநிஷ்ட நிவ்ருத்தியோதான் ஸர்வமதங்களுடைய உத்பத்திக்கும் காரண மாக வேண்டும். ஸ்வப்ரயத்நத்தால் ஸாதித்துக்கொள்ளக்கூடாத அபேக்ஷிதங்களை மநுஷ்யர் தேவதாப்ரஸாதத்தால் ஸாதித்துக் கொள்ள முயல்வார்கள். தேவதையினுடைய ஸத்பாவத்தில் அவர்களுக்கு விச்வாஸம் குறைந்தால், தேவதா ப்ரஸாதத்தை ஸம்பாதித்துக் கொடுக்கும் ஸாதநங்களைப்பற்றி ப்ரவ்ருத்தியும் குறைந்துபோம். இதரர் அவர்கள் உபாஸித்த தேவதைகளை நம் பாமல் அவர்களுடைய மதத்தையே அஜ்ஞாந கல்பிதமென்பர். இந்தப்படி யோசித்தால் ஒரு மதமும் ஜீவிக்கமாட்டாது. பர லோக மென்பதும், மநுஷ்யர் அவ்விடம் சென்றபின் எந்தத் தேவதைகளுடைய ஸாயுஜ்யத்தை அபேக்ஷிக்கின்றனரோ அந் தத் தேவதைகளும், என்றாவது எங்காவது மநுஷ்யருடன் நிஜ மாக ஸம்பந்திக்காவிட்டால் மதமெல்லாம் பொய்யாய்விடும். உபா ஸகருடைய ஜ்ஞாநத்தையும் அதிகாரத்தையும் ஒத்துப் பரலோ கமானது, அதாவது பரலோக வாஸிகளான ஒரு தெய்வமோ, பல தேவதைகளோ, உபாஸகர்க்கு ப்ரஸந்நராகாமல் போனால் ஸர்வ ஸம்ப்ரதாயங்களும் மித்யையில் முடியும். ஸ்வமதம் மாத் ரம் ஸத்யம், மதாந்தரங்கள் மித்யை எனும் அபிமாநம் யார்தான் கொள்ளக்கூடாது? தேவதைகள் உபாஸகர்க்கு யாதேனுமோர் ப்ரகாரமாக ஸ்வஸத்தயை என்றேனும் ப்ரகடநம் செய்யாவிட் டால் யாதொரு மதமும் ஜீவிக்கமாட்டாது. உபாஸகருடைய அர்ஹதையைப் பொறுத்தே தேவதா ப்ரஸாதம் உண்டாகும். அப்படிக்கின்றி அது பக்ஷபாதத்தால் உண்டாகுமென்பது யோ க்யர் அங்கீகரிக்கத் தக்கதன்று. பகவான், தமருகந்த உருவத் தையே அப்யுபகமம் செய்து, அவ்வண்ணமே அவர்களுக்கு, இங்கோ பரலோகத்திலோ ப்ராப்யனாகின்றான் என்பது பாகவ

தர் நிச்சயம். இதர தேவதாசரீரியாகவும் அவன் உபாஸகர்க்கு அபீஷ்டப்ரதனுகின்ருன் என்று ஶ்ருதி சொல்லும்.

ஸர்வோத்க்ருஷ்டமான ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான கீதாசார்யனும், வேதாந்த தத்வங்களை உபநிஷத் வெளியிட்டபடியே நிஷ்கர்ஷித்த பாதராயணரும், தேவதைகளின் இருப்பையும், அவர்களுடைய ஆராதநமான ஸர்வாஶ்ரம கர்மங்களைச் செய்ய வேண்டிய ஆவஶ்யகதையையும்பற்றி நமக்கு உபதேசித்திருக்கின்றார்கள். இதற்குக் காரணம் யோசித்தால் புலப்படும். வைதிக ஸம்ப்ரதாயம் அநாத்யவிச்சிந்ந ஸம்ப்ரதாயம். லோகத்தில் மநுஷ்ய ஸ்ருஷ்டியுடன் அதுவும் உண்டாயிற்று. ஸர்வ ஸ்ரஷ்டாவினுடைய நிஶ்வஸிதங்களென்று வேதங்களை வேதங்களே வர்ணிக்கின்றன. ஶாஶ்வதமான தத்வங்கள் பகவத் க்ருபையால் தத்தத் காலோசிதமாக மஹர்ஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டன. மநுஷ்யன் பாரலௌகிக ஜ்ஞாநத்தைப் படிப்படியாக அடைந்த க்ரமம் வேதங்களில் காட்டப்படுகின்றது. அதாவது, மதமென்பதன் பூர்ணசரித்ரம் அங்கே விளங்குகின்றது. பழைய விஶ்வாஸங்களைப் பொய்யென்று தள்ளிவிட்டு ஆர்ய ஜநங்கள் புது விஶ்வாஸங்களை மேற்கொண்டார்களென்று மந்தமதிகளுடைய ப்ரலாபம். எல்லா விஶ்வாஸங்களும் உண்மைகளே. பரமார்த்த ஸ்வரூபத்தை வேதாந்தம் வெளியிட்டது. அந்த ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தைக் குறித்து வேதங்களின் பூர்வபாகங்கள் ஸஹகரிக்கின்றன. பல அதிகாரிகளைக் குறித்து வேதங்களின் யாவத் பாகங்களும் வேண்டியவையே. ஆதலால், அந்தந்த பாகத்தினுடைய தர்ஶந காலத்தில் அதற்கேற்ற அதிகாரிகளைப்பற்றி வேதங்கள் தத்வத்தையே வெளியிட்டன.

வேதங்களினுடையவும் வைதிக ஸம்ப்ரதாயங்களினுடையவும் ஸம்ரக்ஷணை த்விஜர்களைச் சேர்ந்தது. பகவதாஜ்ஞாதிலங்கநமின்றி அவற்றைத் துறத்தல் அவர்க்கு ஸாத்யமன்று இன்னும் வேதாத்யயந பலத்தைப்பற்றி, அதீதமான ஒவ்வொரு அக்ஷரமும் பகவந்நாமமே என்று, 'யாவதக்ஷராணியாவந்தி உபிராநிஷி ஜாக்ஷிஹி । தாவத் வஸிஷ்டாநி கீர்த்திதாநி நஸம்ஶய:' எனும் ருக்விதாந ஶ்லோகம் வெளியிட்டது. இந்த யோசனை

வேதாத்யயநமும், வேத பாராயணமும் பகவத்ப்ரீணநமென்றும் ச்ரேயஸ்கரமென்றும் காட்டுகின்றது.

ஜாதியென்பது பல ஜநங்களுக்குள் அவர்களுடைய ஜந்மத்தால் உண்டாகப்பட்ட ஒரு ஸம்பந்த விசேஷம். ஒரு ஜாதிக்குள் அடங்கினவர்களுக்கெல்லாம், மூல புருஷன் ஒருவனாகவோ, ஸமாநஸ்தர்களான பலராகவோ இருக்கவேண்டும். அவர்கள் ஸ்வஜாதி ரூபமான ஸம்பந்தத்தைச் சில ஸமாந விச்வாஸங்களாலும், சில தர்மங்களினுடைய அநுஷ்டாநத்தாலும், சில ஆசாரங்களாலும் காப்பாற்றுகின்றார்கள். ஸமாந தேச வாஸத்தால் உண்டாகப்பட்ட ஒற்றுமை தத்காலம் வேண்டப்படுகின்றது. ஆனால், அது ஒரு மத விச்வாஸத்தால் உண்டாகும் சேர்க்கையைக் கெடுக்கமாட்டாது. ஆர்யர் என்பவர்கள் வேத மந்த்ரத்ரஷ்டாக்களுடைய ஸந்ததியார்; வைதிக ஸம்ப்ரதாயங்களையும், தர்மங்களையும், ஆசாரங்களையும் வழிபடுகின்றவர்கள்; தேவருஷி பித்ருக்களுக்கு த்ரோஹம் செய்யாமலும், பகவதாஜ்ஞையை அதிக்ரமிக்காமலும், தங்கள் ஸ்வரூபத்தையும் ஸங்கேதத்தையும் நாசம் செய்யத் தகாதவர்கள்.

ஜாதி நியமங்களுடைய ரக்ஷணம் தத்காலம் சிலருக்கு வருத்தம் தருகின்றது. ஜாதி ப்ரயுக்தமான உத்கர்ஷாபகர்ஷ பராமர்சம் அதற்குக் காரணம். ஸுராபாநத்தில் ஸுகித்துக்கொண்டும், கோமாம்ஸ பக்ஷணத்தில் த்ருப்தியடைந்தும், ஸ்நாநாதி ஸம்ஸ்காரங்களின்றியும், துராசாரங்களில் மூழ்கிப்போன மதாந்தரஸ்தர்கள் ஸத் ப்ராஹ்மணனிடம் விசேஷம் பாராட்டுகின்றார்களில்லை. த்விஜோத்கர்ஷத்தை ஸஹிக்காத மற்றோர்களும் அவ்வண்ணம் நடக்கத் தடையில்லை. பகவத் பக்தியினுடைய ஸதஸத் பாவங்களாலே அபக்ருஷ்ட ஜாதியரை உத்க்ருஷ்டராகவும், உத்க்ருஷ்ட ஜாதியரை அபக்ருஷ்டராகவும் சொல்லும் வசநங்கள் உண்டு. ஜந்மத்தாலும் வ்ருத்தத்தாலும் தாழ்ந்தவனாக எண்ணப்பட்ட ஒருவன் பகவத் ஸம்பந்தத்தால் உயர்வன். அவனை ஜந்ம வ்ருத்தாதிகளை யுடையவன் தாழ நினைக்கக் கூசவேண்டும்.

ஸஹபோஜநமும் பெண் கொடுத்து வாங்குதலும் ஜாதி நிபந்தநம். ஆதலால் தத்தம் ஜாதிகளைத் துறக்காமல், ஒவ்வொருவனும் ஸ்வ ஜாதிக்குரிய க்ரியைகளால் பகவத் கைங்கர்யம் பண்ண ப்ராப்தம். ஆதலால் ஸத்வாதி குண தாரதம்யத்தால் சரீர ஸம்பந்தமாக ஏற்படும் ப்ராஹ்மண்யாதிகளுக்கும், மநஸ்ஸில் ஸத்வ குண விசேஷத்தால் ஸர்வ ஜாதியர்க்குள்ளும் உயர்ந்தவர்களைப்பற்றிச் சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யாதிகளுக்கும் பேதம் உண்டு. சரீர ஸம்பந்தமாக உண்டான ஜாதிகள் உத்பத்தி ஸித்தங்களாய் மரணாந்தமாக நிலைக்கும். மாநஸமான ஸத்வ குணோந்மேஷத்தால் சொல்லப்பட்ட ப்ராஹ்மண்யாதிகள் ஸர்வ ஜாதிகளுக்கும் பகவத் ஸம்பந்தங்களால் ஸம்பாவிதங்கள். இவ்வண்ணம் சரீர ப்ரயுக்தமாயும் மாநஸமாயும் வரும் ஏற்றங்கள் கர்வ ஹேதுக்களானால் அநர்த்தகரமாகும். ஸர்வத்ர ஆத்ம ஸாம்யம் உண்மையாயிருக்கும்போதும், மநுஷ்யர்க்குள் ஸத்வ குண விசிஷ்ட மநஸ்கர்களான பகவத் பரர்கள் யாவராலும் பகுமாநார்ஹர் என்பதை நாம் ஒப்புக்கொண்டு, ஸமாந குல ப்ரஸூதர்களாய், ஸமாந கர்மாநுஷ்டாநங்களாலும், வ்ருத்தங்களாலும் ஏக ஜாதியில் நிலைத்தவர்கள், ஜாத்யந்தரர்களுடன் ஸஹபோஜநாதிகள் விவாஹாதிகள் செய்யத் தடைபட்டிருக்கின்றார்களெனச் சொன்னோம். செய்தாரேயாகில் அவர்கள் ஜாதியும் அது நிலைக்கவேண்டிய காரணங்களும் அழிந்துபோம். ஸர்வாந்நாநுமதியானது ப்ராணாத்யய காலந் தவிர மற்ற காலங்களில் நிஷேதிக்கப்பட்டது. ப்ராஹ்மணனுக்கு அபோஜ்ய போஜநாதிகள் என்றும் உண்டு. ஆனால் தத்தத் காலாநுகுணமாக அவை பேதிக்கவும் காண்கின்றோம்.

இந்த விதமாக ஆஸ்திகர்கள் யோசிக்கத்தகக விஷயங்கள் மீண்டும் பராமர்சிக்கப்பட்டன.

---

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

# நம் முன்னோர்களுடைய த்ருவதேச வாஸம்.

மேல் விவரித்த முடிவுகளுக்கு ஆதாரமாக டிலக் வித்வான் எடுக்கின்ற ருக்வேத வசநங்களில் சிலவற்றைக் குறிக்கின்றோம். ‘ஶஶ்வத்புரோஷா வ்யுவாஸ தேவீ” [முன் காலத்தில் உஷா தேவி இடைவிடாமல் (அதாவது தொடர்ச்சியாக) உதயமானாள்.] ‘கியாத்யாயத்ஸமயா பவாதி யாவ்யூஷுர்யாஶ்ச நூனம் வ்யுச்சான் । அனு பூர்வா: க்ருபதே வாவஶானா ப்ரதீத்யானா ஜோஷமன்யாபிரேதி ॥’ [உஷைகள் எவ்வளவுகாலம் உதிக்கின்றார்கள்? அதாவது, அக்காலம் எவ்வளவு நீடிக்கின்றது? பூர்வம் எந்த உஷைகள் உண்டானார்களோ, அவஶ்யமாக எவர்கள் இனிமேல் உதிக்கப்போகின்றார்களோ, அவர்களுக்குள் இப்போது உதிக்கும் உஷையானவள், அதிக்ரமித்துப்போன (பூர்வ) உஷைகள் எப்படி ப்ரகாசித்தார்களோ, அவ்வண்ணமே ப்ரகாசிக்கின்றாள். விசேஷித்து ப்ரகாசிக்கின்ற அந்த உஷையானவள் அதே ப்ரகாரம் இனி வரப்போகின்ற இதர உஷைகளுடன்கூடச் சேர்கின்றாள்.] (பின் வரப்போகின்றவர்களும் இவளைப்போலே ப்ரகாசிப்பார்களென்று தாத்பர்யம்.) ‘தானீதஹானி பஹுலான்யாஸன் யா ப்ராசீனமுதிதா ஸூர்யஸ்ய । யத: பரிஜார இவாசரந்த்யுஷோ தத்ருக்ஷே ந புனர்யதீவ ॥ [ஸூர்யோதயமாகும் போது, கீழ்த்திசையில், (அல்லது பூர்வகாலத்தில்) ஹே உஷே! (நீ உதயமான) அந்த நாள்கள் அநேக நாள்களாக இருந்தன. எந்தத் தேஜஸ்ஸுக்களுடன், (அல்லது எந்தக் காரணத்தால்)

ீ (ஒரு பதிவ்ரதை) பதிக்கு அபிமுகையாக ஆசரிப்பதை யொத்து, ஸூர்யனுக்கு ஸமீபப்ரதேசத்திலேயே ஸஞ்சரிப்பவளாகக் காணப்படுகின்றாயோ, வ்யபிசாரிணியைப்போல் (நடக்கின்றாய்) இல்லையோ. [ஸூர்யனைப் பரித்யாகம் செய்து இஷ்டப்படி ஸஞ்சரிக்கின்றாயில்லை] 'பரா ருணா ஸாவீரத மத்க்ருதாநி மாஹம் ராஜந்நந்யக்ருதேந போஜம் । அவ்யுஷ்டா இந்நு பூயஸீருஷாஸ ஆ நோ ஜீவாந்வருண தாஸு ஶாதி ॥' [ஹே வருண! இப்போது என்னால் படப்பட்ட (இன்னும் பெரியோர் பட்டு நான் தீர்க்கவேண்டிய) கடன்களைப் போக்கும். ஹே ஸ்வாமிந்! அந்யரால் ஆர்ஜிக்கப்பட்ட தநங்களால் போகங்களை அடையாமலிருப்பேனாக! ஏனென்றால் ஸத்யமாக பஹு உஷஸ்ஸுக்கள் உதிக்கவில்லை. அவர்கள் உதிக்கும்போது நாங்கள் ஜீவிப்பவர்களாக ஸங்கல்பிப்பீர்.]

டிலக் வித்வான் அதே ஸந்தர்ப்பத்தில் ருக்வேதத்தினின்று பஹுவசநங்களை எடுத்துப் பரீக்ஷிக்கின்றார். விஸ்தார பயத்தால் அவற்றை நாம் இவ்விடம் காட்டுகின்றோமில்லை. முடிவாக யஜுர்வேதம் நாலாவது காண்டம், மூன்றாவது ப்ரபாடகம், பதினோராவது அநுவாகம் முழுவதும் எடுத்து யோசிக்கின்றார். அதில் நாம் சில வசநங்களைக் காட்டுகின்றோம்.

“இயமேவ ஸா யா ப்ரதமா வ்யௌச்சதந்தரஸ்யாம் சரதி ப்ரவிஷ்டா । வதூர்ஜஜாந நவகஜ்ஜநித்ரீ த்ரய ஏநாம் மஹிமாநஸ்ஸசந்தே ॥ சந்தஸ்வதீ உஷஸா பேபிஶாநே ஸமாநம் யோநிமநு ஸஞ்சரந்தீ । ஸூர்யபத்நீ விசரத: ப்ரஜாநதீ கேதும் க்ருண்வாநே அஜரே பூரிரேதஸா ॥ ருதஸ்ய பந்தாமநு திஸ்ர ஆகுஸ்த்ரயோ கர்மாஸோ அநு ஜ்யோதிஷாகு: । ப்ரஜாமேகா ரக்ஷத்யூர்ஜமேகா வ்ரதமேகா ரக்ஷதி தேவயூநாம் ॥ சதுஷ்டோமோ அபவத்யா துரீயா யஜ்ஞஸ்ய பக்ஷாவ்ருஷயோ பவந்தீ । காயத்ரீம் த்ரிஷ்டுபம் ஜகதீமநுஷ்டுபம் ப்ருஹதர்கம் யுஞ்ஜாநாஸ்ஸுவராபரந்நிதம் ॥ பஞ்சபிர்தாதா விததாவிதம் யத்தாஸாம் ஸ்வஸ்ரூரஜநயத்பஞ்சபஞ்ச । தாஸாமு யந்தி ப்ரயவேண பஞ்ச நாநா ரூபாணி க்ரதுமதோ வஸாநா: ॥ த்ரிம்ஶத்ஸ்வஸார உபயந்தி

ஷ்க்ருதக்ம் ஸமாநம் கேதும் ப்ரதிமுஞ்சமாநா: । ருதூக்ஸ்தந்வதே க
வய: ப்ரஜாநதீர்மத்யேச்சந்தஸ: பரியந்தி பாஸ்வதீ: ॥"

[முதலில் உதித்தவள் இவளே; அவளுக்குள் (பூமிக்குள்) ப்ரவேசித்து ஸஞ்சரிக்கின்றாள்; வதூ (மணமகள்) புதிய கர்ப்பவதீ, உண்டானாள்; மஹிமையுள்ள மூவர் (அக்நி, வாயு, ஸூர்யன்) அவளை அங்கே பின்தொடர்கின்றார்கள். ஸூர்ய பத்நிகளான இரண்டு உஷைகள், சந்தஸ்ஸுக்களுடன் கூடினவர்களாய் அலங்க்ருதைகளாய், ஒரே இடத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களாய், ப்ரஜைகளுடன் கூடினவர்களாய், ஜரையற்றவர்களாய், தம்முடைய தேஜஸ்ஸை ப்ரகாசிப்பித்துக்கொண்டு ஸஞ்சரிக்கின்றார்கள். மூவர் (உஷைகள்) ருதத்தின் மார்க்கத்தில் வருகின்றார்கள். மூன்று அக்நிகள் ஜ்யோதிஸ்ஸுடன் (தொடர்ந்து) வருகின்றார்கள். ஒருத்தி ப்ரஜைகளை ரக்ஷிக்கின்றாள். வீர்யத்தை ஒருத்தி (ரக்ஷிக்கின்றாள்.) சிஷ்டர்களுடைய வ்ரதத்தை மற்றொருத்தி ரக்ஷிக்கின்றாள். நாலாவது அவள் (உஷை) ருஷிகளாயும், யஜ்ஞத்தின் இரண்டு பக்ஷங்களாயும் ஆகி சதுஷ்டோமமெனப்பட்ட நாலு காநங்களாயினாள்; அதாவது (நால்வராக அவ்வுஷைகள்) காயத்ரி, த்ரிஷ்டுப், ஜகதீ, அநுஷ்டுப் முதலான மஹா காநங்களை ப்ரயோகித்து, இந்த ப்ரகாசத்தை (ஸுவர்லோகத்தை) கொண்டு வந்தார்கள். ஸ்ருஷ்டி கர்த்தா இதை ஐந்தினால் பண்ணினார். (அதாவது ஐந்து உஷா தேவதைகளை ஸ்ருஷ்டித்தார்.) ஆதலால் அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஐந்தைந்து ஸஹோதரிகளை உண்டாக்கினார். அவர்களுடைய பஞ்சக்ரதுக்கள் (பஞ்சக்ரதுக்கள் உஷா காலத்தில் செய்யப்பட்ட ஹோமங்கள் என்று வேத பாஷ்யம். டிலக் வித்வான் ஐந்து மார்க்கங்கள் என்று அர்த்தம் செய்கிறார்.) அநேக ரூபங்களைத் தரித்துக்கொண்டு கூட்டங் கூட்டமாய்ப் போகின்றன. (மொத்தம் முப்பது உஷைகள் சொல்லப்பட்டன. இவை ஐந்து கூட்டங்களாகின்றன.) முப்பது ஸஹோதரிகள் ஸமாநமான கொடிகளைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட தேச விசேஷத்தைக் குறித்துச் செல்கின்றனர். ஜ்ஞாநிகளான அவர்கள் ருதுக்களைப் பண்ணுகின்றார்கள்; தமது (மார்க்கங்களை) அறிந்தவர்களாய், ப்ரகாசத்துடன் கூடினவர்களாய், சந்தஸ்ஸின் மத்யே, (சந்தஸ்ஸால் சூழப்பட்ட ஸூர்யனுடைய ஸமீபத்திலே) அவர்கள் ப்ரதக்ஷிணம் செய்கின்றார்கள்.]

இந்த வசநங்கள் பகு திநங்கள் நீடித்து வளர்கின்ற த்ருவ ப்ரதேச தர்ஸிதமான உஷா கால லக்ஷணத்தை விவரிக்கின்றனவென்று டிலக் வித்வான் யோசனே.

அப்படிப்பட்ட உஷா காலம் அவ்வண்ணம் நீண்ட ராத்ரியின் பின் ஸம்பவிக்கவேண்டும். (அதன் பிறகும் ஒருகாலம் நீடித்த பகலாய் யோசிக்கத்தக்கதே.) இப்படிப்பட்ட த்ருவ ப்ரதேசாநுபவமும் வேத வசநங்களில் காணப்படுவதாய் யோசிக்கப்படுகின்றது. 'தீர்க்கம் தம ஆசயதிந்த்ரசத்ரு:', என்பதால், தேவசத்ருவான வ்ருத்ராஸுரன் நீண்ட இருட்டில், ஜல மத்யத்தில், மக்நனுகவிருந்தான் என்று ஏற்படுகின்றது. இது தேவர்களுடைய ராத்ரியான பித்ருயாநத்தைக் காட்டுகிறதாக யோசனே. ஸ்தலாந்தரங்களில் வ்ருத்ரனே இந்த்ரன், (தமஸி ஹர்ம்யே) ஆழமான இருட்டில், (அஸூர்யே தமஸி) ஸூர்ய ப்ரகாசம் இல்லாதவிடத்தில், கட்டி வைத்ததாயும் சொல்லியிருக்கிறது. 'உர்வஸ்யாம் அபயம் ஜ்யோதிரிந்த்ர மா நோ தீர்க்கா அபி நசந் தமிஸ்ரா:', [அதாவது: ஓ இந்த்ர! பயரஹிதமான விஸ்தீர்ண ப்ரகாசத்தை நான் அடைவேனுக. விஸ்தாரமான இருட்டுடன் கூடிய நிசாவானது எங்களே வ்யாபிக்காமலிருக்கட்டும்.] 'யா ந: பீபரதச்விநா ஜ்யோதிஷ்மதீ தமஸ்திர: । தாமஸ்மே ராஸாதாமிஷம் ॥' [அதாவது: ஓ அச்விநீ தேவர்களே! ஜ்யோதிஸ்ஸுடன்கூடிய யாதொரு அந்நம் அந்தகாரத்தை (ராத்ரியை) முற்றிலும் நாசம் செய்து எங்களுக்குத் த்ருப்தி செய்யுமோ, அப்படிப்பட்ட அந்நத்தை எங்கட்குக் கொடுங்கள்.] 'அபோத்யக்நி: ஸமிதாநோ அஸ்மே உபோ அத்ருச்ரந் தமஸச்சிதந்தா: । அசேதி கேதுருஷஸ: புரஸ்தாச் ச்ரியே திவோ துஹிதுர் ஜாயமாந: ॥' [அதாவது: எங்கள் பொருட்டு அக்நியானது ஸமித்தால் வ்ருத்தியாய் ப்ரகாசிக்கின்றூர்; இருட்டின் எல்லேகள் யாவராலும் பார்க்கப்படுகின்றன. ஸூர்யனுடைய புத்ரியான உஷையினுடைய கேதுவானது (த்வஜமானது) கீழ்த்திசையில் ப்ரகாசத்துடன் கிளம்பி யாவராலும் தர்சிக்கப்படுகின்றது.] 'ஜ்யோகேவ தீர்க்கம் தம ஆசயிஷ்டா:' [அதாவது: 'பகுகாலமாக (எங்களேவிட்டு) மஹத்தான அந்தகாரத்தில் இருந்து படுத்திருந்தாய்' என்று யஜ்ஞகாலத்தில் அக்நியை அழைத்

தார்கள்.] ராத்ரி ஸூக்தத்தில், '𑌯𑌾𑌵𑌯𑌾 𑌵𑍃𑌕𑍍𑌯𑌂 𑌵𑍃𑌕𑌂 𑌯𑌵𑌯 𑌸𑍍𑌤𑍇𑌨𑌮𑍂𑌰𑍍𑌮𑍍𑌯𑍇 । 𑌅𑌥𑌾 𑌨𑌃 𑌸𑍁𑌤𑌰𑌾 𑌭𑌵 ।' [அதாவது: ஓ ராத்ரியே! வ்ருகியையும் வ்ருகத்தையும் எங்களிடத்தினின்று போக்கு; அப்படியே திருடரையும் எங்களிடம் வராமல் பண்ணு; பிறகு நீ எங்களால் ஸுகமாகக் கடக்கத்தவளாயிரு:] என்று வசநமுண்டு. இதனுடைய பரிசிஷ்டத்தில் '𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌶𑌿𑌵𑌾𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌮𑌹𑌿 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌮𑌹𑌿', என்கிற வாக்யத்தை டிலக் வித்வான் எடுத்து ராத்ரி அநுகூலமாக இருக்க வேண்டுமென்றும், ராத்ரியின் அக்கரையை க்ஷேமத்துடன் போய்ச் சேர்வதைப்பற்றியும் ப்ரார்த்திக்கப்படுகின்றதென்று சொல்லுகிறார். இதை அநுஸரித்ததோர் அதர்வ வேத வசநமெடுக்கப்படுகிறது. அதாவது: '𑌯𑌸𑍍𑌯𑌾 𑌨 𑌪𑌾𑌰𑌂 𑌦𑌦𑍃𑌶𑍇 𑌨 𑌯𑍋𑌯𑍁𑌵𑌦𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌵𑌿𑌶𑌤𑍇 𑌯𑌦𑍇𑌜𑌤𑌿 । 𑌅𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌸𑌸𑍍𑌤 𑌉𑌰𑍍𑌵𑌿 𑌤𑌮𑌸𑍍𑌵𑌤𑌿 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌮𑌹𑌿 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌮𑌹𑌿' இதனால், ஸஞ்சரிக்கின்ற ஸர்வ வஸ்துக்களும் ராத்ரியில் விஶ்ரமத்தை அடைகின்றன; ஆனால் ராத்ரியின் எல்லை காணப்படுகின்றதில்லை; அப்படிப்பட்ட நீண்ட இருட்டுடன்கூடிய ராத்ரியின் முடிவை அடையும்படி ப்ரார்த்திக்கப்படுகின்றதெனக் கருத்து. தைத்திரீய ஸம்ஹிதையில், '𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑍋 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌯 ।' [ஓ சித்ராவஸோ! உன் எல்லையை நான் க்ஷேமமாகக் கடப்பேனாக.] என்பதற்கு விவரணமாக, '𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑍋 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌾𑌰𑌮𑌶𑍀𑌯𑍇𑌤𑍍𑌯𑌾𑌹 । 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌵𑍈 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑍁𑌰𑌵𑍍𑌯𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑍈 𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌯𑍈 𑌪𑍁𑌰𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌅𑌭𑍈𑌷𑍁𑌃 ।' [சித்ராவஸு என்றால் ராத்ரி; முன் காலத்தில் ப்ராஹ்மணர்கள் ராத்ரி முடிந்து உஷாகாலம் வராதோ என்று பயந்தார்கள்] என்று தைத்திரீய ப்ராஹ்மணம் சொல்கின்றது. வேத பாஷ்யத்தில் ஹேமந்த ருதுவில் ராத்ரி நீடிக்கின்றபடியால் மேற்சொன்ன பயம் உண்டாகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வேதத்தில் ப்ராஹ்மணமானது, ஹேது, நிர்வசநம், நிந்தா, ப்ரஶம்ஸா, ஸம்ஶயம், விதி, பரக்ரியா, புராகல்பம், வ்யவதாரணகல்பனை, உபமாநம், என்கிற பத்து விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பாஷ்யகாரர், ருக்வேத பாஷ்யாரம்பத்தில், இவற்றைக் காட்டிப் புராகல்பத்ருஷ்டாந்தமாக மேலெடுத்த

தைத்திரீய ப்ராஹ்மண வசநத்தை எடுக்கின்றார். ஆதலால் அவ்விடம் காட்டப்பட்டபடி ப்ராஹ்மணர் பயந்தது பூர்வ கல்பத்திலென்று டிலக் நிஷ்கர்ஷிக்கிறார். அது தைத்திரீய ஸம்ஹிதா காலத்தில் ஸ்மரண ரூபமாக வந்திருக்கலாம். அதாவது, டிலக் அபிப்ராயப்படி இப்போதைக்கு 4,500 வருஷங்களுக்கு முன், மேலே சொன்ன புராகல்பாநுபவம் ஆர்யர் ஸ்மரிக்கத்தக்கதாயிருந்தது என்று அபிப்ராயம். த்ருவமத்யே ஸம்வத்ஸரமே ஒரே பகல் ஒரே ராத்ரியில் முடிகின்றது. அந்த ஸ்மரணத்தைக் காட்ட தைத்திரீய ஆரண்யகத்தில், 'ஏகஞ்ஹி ஶிரோ। நாநா முகே। க்ருத்ஸ்நந்தத்ருதுலக்ஷணம்।' [ஸம்வத்ஸரமாகிய தேவதைக்கு ஶிரஸ் ஒன்று, முகம் இரண்டு (அதாவது அயநங்கள்); இதெல்லாம் ருது லக்ஷணங்கள்;] 'உபயதஸ்ஸப்தேந்த்ரியாணி। தக்ஷிணவாமயோ: பார்ஶ்வயோ:। தஸ்யைஷா பவதி। ஶுக்ரந்தே அந்யத்யஜதந்தே அந்யத் விஷுரூபே அஹநீ த்யௌரிவாஸி। விஶ்வா ஹி மாயா அவஸி ஸ்வதாவோ பத்ரா தே பூஷந்நிஹ ராதிரஸ்து।' [ஸம்வத்ஸர தேவதையினுடைய வலப்பக்கம் இடப்பக்கங்களில் ப்ரகாசமாயும் இருட்டாயும் (இருக்கின்றன.) பின்வரும் ருக் அதை விவரணம் செய்கின்றது. உன்னுடைய ப்ரகாசமான ரூபம் ஒன்று; உன்னுடைய யஜத (இருட்டான) ரூபம் மற்றொன்று; அதாவது பிந்ந ரூபத்துடன் கூடிய இரண்டு நாள்கள் (அஹநீ) நீர் தேவலோகம்போலிருக்கின்றீர். ஓ அந்யாதாரமற்றவரே! எல்லா மாயைகளையும் (சக்திகளையும்) காப்பாற்றுகின்றீர். ஓ பூஷன்! உமது தாத்ருத்வம் மங்களகரமாயிருக்கட்டும்;] என்றிப்படி வசநங்கள் காட்டப்பட்டன. மேலே சொன்ன வசநங்களுக்குப் பின்பு, 'நாத்ர பு ஸ்வம்। நவ ப்ருஷ்டா நவாஶுஷ்கம்। நாதி தப்தம்। ஸம்வத்ஸர ஏவ ப்ரத்யக்ஷேண ப்ரியதமம் விப்ராஸ:।' எனும் வாக்யத்தால் இது ஸம்வத்ஸர ப்ரகரணமென்று காட்டப்பட்டது.

இன்னும் ருக்வேதத்திநின்று, 'வி ஸூர்யோ மத்யே அமுசத்ரதம் திவோ விதத்தாஸாய ப்ரதிமாநமார்ய:। த்ருஹ்ளாநி பிப்ரோரஸுரஸ்ய மாயிந இந்த்ரோ வ்யாஸ்யச்சக்ருவாம் ருஜிஶ்வநா॥' [ஸூர்யன் தேவலோகமத்யே (ஆகாசநடுவில்) ரதத்தை நிறுத்தி

ஞர். ஆர்யரான இந்த்ரன் அப்போது தாஸர்களின் (அஸுரர்களின்) பொருட்டு ப்ரதீகாரத்தை அறிந்தார்; மாயைகளுடன் கூடிய பிப்ரு எனும் அஸுரனுடைய துர்க்கங்களை ருஜிஶ்வன் எனும் ராஜருஷியின் ஸஹாயத்தையடைந்து, இந்த்ரன் நாசம்செய்தார்.] மற்றோரிடத்தில் ‘ராஜா வருணஶ்சரதி மத்யே திவ: ப்ரேங்கம் ஹிரண்யயம்’ [ஈஶ்வரனான வருணன் அந்தரிக்ஷத்தில் ஸ்வர்ணமயமான இந்த ஸூர்யனை டோலையில் ஆடுவதுபோல் இருக்கச் செய்தார்.] என்கிற வசநங்கள் எடுக்கப்பட்டன. மேலெடுத்த வசநங்கள் யாவையும், த்ருவத்தின் கீழ்ஸம்வத்ஸரம் ஒரு நீண்ட பகல் ஒரு நீண்ட ராத்ரியாய் முடிவதையும், அந்த நீண்டபகலும் இரவும் ஸம்வத்ஸரத்துக்கு இரண்டு பக்கங்களாய் வர்ணிக்கப்பட்டமையும், த்ருவப்ரதேசத்திலும், தத்ஸமீபத்திலும், நீண்ட ராத்ரியால் ஜநங்கள் பயந்தாரென்பதையும் அந்தப் பயம் நமது தேச ராத்ரிகளால் ஜநிக்காதென்பதையும், த்ருவப்ரதேசத்தில் தான் அநேக நாள்களடங்கி நீண்ட ஓரே பகலில், ஸூர்யன் ஆகாசத்தின் தென்புறத்தில் டோலையில் ஆடுவதொத்து முன்னும் பின்னுமாக ஸஞ்சாரம்செய்வதுபோல் காணப்படுவான் என்பதையும், நம் பூர்வீகர் ஸ்மரித்தார்களென்பதற்கு த்ருஷ்டாந்தமாக டிலக் வித்வான் காட்டுகின்றார்.

இன்னும் தக்ஷிணசப்தம், வலப்பக்கம் தென்திசை இரண்டையும் குறிக்கின்றதற்குக் காரணம் த்ருவப்ரதேசாநுபவம் என்று சொல்லி, அதற்குப் பல ஹேதுக்களைக் காட்டுகிறார். அங்கே ஸூர்யன் எப்போதும் தென்றிசையை ஆஶ்ரயித்திருப்பதால், கீழ்த்திசையை நோக்கி வைதிககர்மம் செய்வோர்க்கு எக்காலத்திலும் ஸூர்யன் வலப்புறமாயும் தென்றிசையிலும் இருப்பர்.

ஏழு, எட்டு ஸூர்யர்களைப்பற்றி முன்பே ப்ரஸ்தாவித்தோம். ருக்வேத ஸம்ஹிதையின் 9-வது மண்டலத்தில், ‘நாநாஸூர்யா:’ என்றும், ‘தேவா ஆதித்யா யே ஸப்த’, என்றும் வசநங்கள் உள. ‘நாநாவிம்ஶகவ த்ருதமிநாம் நாநாஸூர்யக்ஷம்’, என்றும், ‘ஸப்த திஶோ நாநாஸூர்யா: ஸப்த ஹோதார ருத்விஜ: தேபிர் தேவாஸ ஆதித்யா:’ என்றும், மேற்படி வசநங்களுக்குப் பாஷ்யம். மித்ரன், அர்யமா, பக:, வருணன், தக்ஷன், அம்ஶன் இவர்

களை மேற்படி ஸூர்யர்களாக ருக்வேதத்தில் ஸ்தலாந்தரங்களில் சொல்லப்படுகிறது. அங்கே, ஏழாவது எட்டாவது ஸூர்யர்கள் பெயரைச் சொல்லவில்லை. யாஸ்கரும் ஸாயண பாஷ்யகாரரும் ஸூர்யனுடைய ஸப்தரச்மிகளைக்கொண்டு, ஸப்த ஸூர்ய வ்யவஹாரத்தை ஸமர்த்திக்கின்றார்கள். ஆனால் மார்த்தாண்டனுடன் ஸூர்யர் எட்டுப் பெயரெனத் தெரிகின்றது.

இந்த ஆதித்யர்களுடைய உத்பத்தியைப்பற்றி ருக்வேதம் 10-வது மண்டலம், 72-வது ஸூக்தம் கீழே தமிழ்ப்படுத்தப்படுகிறது :—

"நாம் ஆதித்ய தேவதைகளுடைய ஜந்மங்களை ஸ்பஷ்டமான வாக்கினால் சொல்லுகின்றோம். அவர்கள் பூர்வயுகத்தில் உத்பந்நர்களானாலும் உத்தர யுகங்களில் யாகத்தில ஸஸ்த்ரங்கள் அநுஷ்டிக்கப்படுமளவில், ஸ்தோத்ரம் செய்பவர்களைக் கடாக்ஷிக்கின்றார்கள். ப்ரஹ்மணஸ்பதி எனும் அதிதியானவள் தேவர்களுடைய ஜந்மங்களை, கம்மாளன் அக்நியை ஜ்வலிக்கச்செய்வது போல உண்டு பண்ணினாள். தேவர்களுடைய பூர்வயுகத்தில் (ஆதி ஸ்ருஷ்டியில்) அவர்களுக்கும் உபாதாநகாரணமாய் நின்ற அவ்யாக்ருதத்தினின்று, நாமரூப விசிஷ்டமான தேவர் முதலான பதார்த்த ஸ்ருஷ்டி உண்டாயிற்று. தேவர்களுடைய ப்ரதம யுகத்தில் அவ்யாக்ருதத்தினின்று மேல்சொன்ன நாமரூப விசிஷ்ட ப்ரபஞ்சம் உண்டாயிற்று. பிறகு திசைகள் உண்டாயின. அதைத் தொடர்ந்து உத்தாநபதம் எனும் வ்ருக்ஷ விசேஷம் வெளிப்பட்டது. அதினின்று பூமி உண்டாயிற்று. புவர்லோகத்தினின்று திசைகள் உண்டாயின. அதிதியினின்று தக்ஷனும், தக்ஷனிடம் அதிதியும் உண்டானார்கள். (இருவரும் ஸமாந ஜந்ம முடையவர்கள்; அல்லது தேவதைகளுடைய தர்மத்தின்படி ஒருவர் மற்றொருவருக்குக் காரணமாயிருந்து இருவரும் ஜநித்தார்கள் என்று யாஸ்காசார்யர்.) ஓ தக்ஷ! உன் புத்ரியான அதிதி, ஆதித்யர் எனும் புத்ரர்களைப் பெற்றாள். அவர்கள் மரணமற்றவர்; ஸ்தோத்ரங்களால் பஜிக்கத்தக்கவர். ஓ தேவர்களே! எப்போது நீங்கள் அந்த ஜலத்தில் பலத்துடன்கூடி நின்றீர்களோ, அப்போது (ஜலத்தில்) ந்ருத்யம் செய்பவர்போலிருந்த உங்களுடைய ஸம்பந்தத்தையுடைய (உங்களுடைய அம்சபூதமான) ரேணுவானது (ஆகாசாபிமுகமாக) வெளிப்பட்டது. ஓ தேவர்களே! யதிகளைப்போல் (மேகங்

களைப்போல்) எப்போது நீங்கள் உங்களுடைய தேஜஸ்ஸால் புவனங்களைப் பூர்த்தி செய்தீர்களோ, அப்போது ஸமுத்ர ஜலத்தில் மறைக்கப்பட்டிருந்த ஸூர்யனை (மார்த்தாண்டனை) வெளிக்கிளப்பினீர்கள். எட்டு புத்ரர்கள் (மித்ரன் முதலானோர்) அதிதியின் சரீரத்தினின்று உண்டானார்கள். அவர்களில் அதிதி ஏழு புத்ரர்களுடன் தேவர்களிடம் (ஸாத்யர்கள்) சென்றாள். எட்டாவது புத்ரனான மார்த்தாண்டனைத் தூர எறிந்துவிட்டாள். ஏழு புத்ரர்களுடன் அதிதி பூர்வயுகாபிமுகையாய்ச் சென்றாள். (ஜனங்களின்) ஜந்ம மரண நிமித்தமாக மார்த்தாண்டனை மறுபடியும் கொண்டுவந்தாள்."

ஏழு ஆதித்யர்கள் என்றால், மித்ரன், வருணன், தாதா, அர்யமா, அம்சஃ, பகஃ, விவஸ்வாந், இவர்கள். எட்டாவது ஆதித்யன் மார்த்தாண்டன். தைத்திரீய ஆரண்யகத்தில் '𑌅𑌷𑍍𑌟𑍌 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌸𑍋 𑌅𑌦𑌿𑌤𑍇𑌃 । 𑌯𑍇 𑌜𑌾𑌤𑌾𑌸𑍍𑌤𑌨𑍍𑌵𑌸𑍍𑌪𑌰𑌿 । 𑌦𑍇𑌵𑌾𑌂 𑌉𑌪𑌪𑍍𑌰𑍈𑌤𑍍𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌃 । 𑌪𑌰𑌾 𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡𑌮𑌾𑌸𑍍𑌯𑌤𑍍 । 𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑍈𑌰𑌦𑌿𑌤𑌿𑌃 । 𑌉𑌪𑌪𑍍𑌰𑍈𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌂 𑌯𑍁𑌗𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇 𑌤𑍍𑌵𑌤𑍍 । 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡𑌮𑌾𑌭𑌰𑌤𑍍 ।' என்று ருக்வேத வசநத்தையே சொல்லப்பட்டிருக்கிறது; (ஈஷத் பேதத்தோடு.) பிறகு அவ்வெட்டு ஆதித்யர் பெயர்கள் மித்ரன், வருணன் தாதா, அர்யமா, அம்சஃ, பகஃ இந்த்ரன், விவஸ்வாந் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்க்குள் மார்த்தாண்டன் இன்னானென்பது தெரியவில்லை. அதற்கு முன்பாக அவ்வாதித்யர்கள் பெயர்கள் ஆரோகஃ, ப்ராஜஃ, படரஃ, பதங்கஃ, ஸ்வர்ணரஃ, ஜ்யோதிஷ்மான், விபாஸஃ, கச்யபஃ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களைப்பற்றிய வசநங்களை முன்பே யோசித்தோம். தைத்திரீய ப்ராஹ்மணத்தில் அதிதியானவள் ஸாத்யாளெனும் தேவதைகளைக் குறித்து நான்கு தரம் ஹவிஸ்ஸை ஸமர்ப்பித்ததாகவும், ஸாத்யர்களிடம் அந்த ஹவிஸ்ஸின் சேஷத்தை அடைந்து புஜித்து, அவற்றின் பலமாக முதலில் தாத்ரி அர்யமா எனும் புத்ரர்களையும், பிறகு மித்ரா வருணர்களையும், முடிவாக இந்த்ரனையும் விவஸ்வானையும் பெற்றாளென்றும் சொல்லியிருக்கிறது. தைத்திரீய ஸம்ஹிதையி

லும் இவ்வாதித்யர்கள் ஜநநத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆரண்யகம், ‘அஷ்டௌ தநவப்ரவஷிரா’, என்று ஆதித்யர் எட்டு பெயர் என்பது வேதத்தாலேயே நிம்சிதமென்று முடிகின்றது. ஶதபத ப்ராஹ்மண பூர்வ பாகங்களில் அதிதியின் முதல் ஏழு குமாரர்கள்தான் ஆதித்ய தேவர்களெனப்படுகிறார்கள் என்றும், எட்டாவது புத்ரனான மார்த்தாண்டன் அபூர்ணனாய்ப் பிறந்ததாயும், ஆதலால் மற்ற ஆதித்யர்கள் ஜீவன்களையும் இதர ப்ராணிவர்க்கங்களையும் அவன் சரீரத்தினின்று உண்டுபண்ணினார்களென்றும் சொல்லப்படுகிறது. தைத்திரீய ஸம்ஹிதையில் கநிஷ்ட புத்ரன் விவஸ்வான் என்றும், மநுஷ்யர் அவனிடம் உண்டானார் என்றும் சொல்லப்படுகிறது. ஶதபத ப்ராஹ்மண பின் பாகத்தில் ஆதித்யர்களுடைய ஸங்க்யை பன்னிரண்டாய் ஏற்படுகிறது. உபநிஷத்துக்களிலும் அப்படியே. ஶதபத ப்ராஹ்மணம் பன்னிரண்டு மாஸங்களுக்குப் பன்னிரண்டு ஆதித்யர்கள் என்றும் சொல்கின்றது. ஆதலால் (‘தேவாநாம் பூர்வ்யே யுகே’) (தேவர்களுடைய பூர்வயுகத்தில்) ஆதித்யர் ஸங்க்யை முதலில் ஏழு மாஸத்துக்கு ஏழாக இருந்ததென்றும், அவ்வேழு மாஸங்களும் ஸூர்ய ப்ரகாசம் உள்ள மாஸங்களென்றும், எட்டாவது ஆதித்யன் அபூர்ணனாய் உத்பவித்தான் என்பதால், எட்டாவது மாஸம் முதல், ஸூர்ய ப்ரகாசமில்லாத தீர்க்க ராத்ரியாயிருந்ததென்றும், மார்த்தாண்டன் எனும் சப்தார்த்தம் ம்ருதமான முட்டை அல்லது பக்ஷி என்றும், ஆதலால் பேரிருளில் பூமியின்கீழ் சென்று அப்ரகாசத்தை அடைந்த காலத்தின் ஸூர்யன் அவன் என்றும், ருக்வேதத்தில் ஸூர்யனைப் பல விடங்களில் பக்ஷி என்று வர்ணிக்கப்பட்டதெனவும், அஸ்தமிக்கும் ஸூர்யனை ருக்வேதம் X-55-5 ல், ‘ஜகார,’ என்று வர்ணிக்கப்பட்டதெனவும், இந்த யோசனைகள் யாவும் த்ருவ ஸமீப ப்ரதேசங்கட்கே பொருந்துமென்றும், தத்தேசாநுபவ ஸ்மரணம் பரம்பராகதமாய் வேத பாகங்களில் நம் பூர்வீகர்களால் காப்பாற்றப்பட்டதென்றும் டிலக் வித்வான் யோசிக்கின்றனர்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑍃𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

---

𑌨 𑌦𑍇𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌨 𑌚 𑌸𑍁𑌖𑌮𑌶𑍇𑌷𑌾𑌭𑌿𑌲𑌷𑌿𑌤𑌂
𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌮𑌪𑌿 𑌤𑌵 𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑌾𑌤𑍍 ।
𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌂 𑌨𑌾𑌥 ! 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌸𑌹𑍇 𑌯𑌾𑌤𑍁 𑌶𑌤𑌧𑌾
𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌮𑌧𑍁𑌮𑌥𑌨 ! 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑌿𑌦𑌮𑍍 ॥ 57

---

57. கீழ் மூன்று ஶ்லோகங்களால், பகவானிடத்தில் பர பக்தியையும் பகவானிடத்திலேயே பர்யவஸித்நிராமல் பாகவதாளவும் ப்ரவஹிக்கும் ஶேஷத்வ புத்தியையும் பாகவதர்களுடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகும்படியான அர்ஹதையையும் ப்ரார்த்தித்தார். இந்த ஶ்லோகத்நில் அநிஷ்டங்களின் நிவர்த்தநத்தை ப்ரார்த்திக்கிறவராய், 'உனனுடைய ஶேஷத்வத்தின் பலமான கைங்கர்யமென்னும் ஸம்ருத்திக்கு எவை எவை அநுபயுக்தங்களோ அவையவை யெல்லாம் அடியேனுக்கு அநிஷ்டங்களே; அவைகளைப் போக்கியருளவேணும்' என்று விஜ்ஞாபநம் செய்கிறார்.

உண்மையாகவே, ஸ்ரீ பகவானாலேயே "மயர்வற மதிநலமருளினன்" என்கிறபடி பரம கருணையால் கொடுக்கப்பட்ட ஜ்ஞாநத்தையுடையவராயும், அந்த ஜ்ஞாநம் பக்திரூபாபந்ந ஜ்ஞாநமாகையாலே பர பக்தியைக்கொண்டு பகவத்குணாநுபவத்தைப் பண்ணினவராயும், அந்த அநுஸந்தாநத்தால் பிறந்த ப்ரீதி உள்ளடங்காமையாலே பரீவாஹாபேக்ஷை பிறந்து ஸம்ஸாரிகளின் துர்க்கதியை நிவ்ருத்திக்க வேணுமென்னும் திருவுள்ளத்துடன் இந்த ஸ்தோத்ரரத்நத்தை வெளியிட ப்ரவ்ருத்தித்தவராயுமிருக்கும் ஸ்ரீ ஆளவந்தாருக்கு, பகவத் கைங்கர்யாநுபயுக்தமான வஸ்து

தவிர மற்ற எது தான் அநிஷ்டமாகும்? அப்படிப்பட்ட அநிஷ்டத்தின் நிவ்ருத்தியைத்தான் இவ்விடத்தில் ப்ரார்த்திக்கிறார்.

ஹே நாத! தவ ஶேஷத்வஸ்வபாவ பஹிஷ்க்ருதம் தேஹம் க்ஷணமபி ந ஸஹே; ப்ராணாந் ந ஸஹே; ஸர்வேஷாமபிலஷிதம் ஸுகம் ந ஸஹே; ஆத்மாநம் ச ந ஸஹே; அந்யதபி ந ஸஹே; தத்ஸர்வம் ஶததா விநாஶம் யாது; ஹே மதுமதந! இதம் ஸத்யம் விஜ்ஞாபநம். [ஹே நாத! அடியேனுடைய அந்தரங்கமான ஶரீரத்தையும், அது உன்னுடைய ஶேஷத்வத்திற்கு அநுபயுக்தமாகில், நான் ஒரு க்ஷணம்கூட வேண்டேன்; அந்தத் தேஹத்திற்குத் தாரகங்களான ப்ராணங்களையும் வேண்டேன்; எல்லாருமாதரிக்கும் ஸுகத்தையும் வேண்டேன்; இவையெல்லாவற்றிற்கும் ஆஶ்ரயமாக நிற்கும் ஆத்மாவையும் வேண்டேன்; மற்றை புத்ரமித்ர களத்ராதிகளையும் வேண்டேன். இவையெல்லாம் உருமாய்ந்து போகவேண்டும். ஹே மதுமதந! இது அஹ்ருதயமான விஜ்ஞாபநமன்று; இந்த விஜ்ஞாபநத்தை மெய்யாகவே செய்கின்றேன்.]

ஹே நாத - இதனால் பகவானுக்குள்ள ஸர்வஶேஷித்வம் சொன்னதாயிற்று. 'உனக்கும் நமக்குமுள்ள இந்த நாத ஶேஷ ஸம்பந்தம் அவர்ஜநீயமன்றோ? அப்படிப்பட்ட ஸம்பந்தத்திற்குப் புறம்பானவற்றை எப்படி நான் ஸஹிப்பேன்?' என்பது ஹ்ருதயம்.

தவ ஶேஷத்வஸ்வபாவ பஹிஷ்க்ருதம் - 'உன்னைக்குறித்துள்ள ஶேஷத்வமாகிற விபவத்திற்கு வெளிப்பட்டதான' என்பது ஶப்தார்த்தம். அதாவது - 'உனக்கு ஶேஷமாயிருப்பதன் பலமான கைங்கர்யமென்னும் ஸம்ருத்திக்கு அநுபயுக்தமான' என்று தாத்பர்யம். ஸர்வஶேஷியான பகவானுக்கு ஶேஷத்வ பஹிர்பூதமான பொருளும் உளதோ? அது ஒருகாலும் ஓரிடத்திலும் ஸம்பவியாதாகையால், இவ்விடத்தில் கைங்கர்யாநுபயோகத்தையே ஶேஷத்வ பஹிர்பாவமாக ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளம் பற்றுகிறார்போலும்.

தே³ஹம் ந ஸஹே - தேஹத்தை ஸஹியேன். தேஹமே ஆத்மாவென்று எண்ணுவாரன்றே பலர்? அப்படிப்பட்ட அபிமானத்திற்குப் பாத்ரமான பொருளும் பகவத் கைங்கர்யாநுபயுக்தமாணல் வேண்டுவதில்லை என்று தாத்பர்யம். மேல் வரும் 'அஶேஷாபி⁴லஷிதம்' [எல்லாரு மாதரிக்கும்] என்னும் விஶேஷணத்தை 'தே³ஹம்' முதலிய ஒவ்வொரு ஶப்தத்திலும் அந்வயிக்கலாம்.

ப்ராணாந் ஸஹே - தேஹத்திற்கு தாரகங்களன்றோ ப்ராணன்கள்? ஆகையால் தேஹத்தைச் சொன்னவுடன் இவைகளை ப்ரஸ்தாவிப்பது.

அஶேஷாபி⁴லஷிதம் ஸுக²ம் ந ஸஹே - எல்லாராலும் ஆதரிக்கப்படும் ஸுகத்தையும் வேண்டேன். ஸுகத்தை ப்ரார்த்தியாமலுள்ள வ்யக்தி இவ்வுலகில் இல்லையாகையால் 'அஶேஷாபிலஷிதம்' என்று விஶேஷிக்கப்பட்டது "ஸுகமென்று மோக்ஷஸுகத்தைச் சொல்லவுமாம்" என்பது ஸ்ரீ பிள்ளையின் திருவுள்ளம். "ந தே³வலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே" என்பதற்கு இது ஒத்ததே.

"ந நாகப்ருஷ்ட²ம் ந ச ஸார்வபௌ⁴மம்
ந பாரமேஷ்ட்²யம் ந ரஸாதி⁴பத்யம் ।
ந யோக³ஸித்³தீ⁴ரபுநர்ப⁴வம் வா
வாஞ்ச²ந்தி யத்பாத³ரஜ꞉ ப்ரபந்நா꞉ ॥"

என்னும் ஸ்ரீ பாகவத வாக்யமும் இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

ஆத்மாநம் ச ந ஸஹே - கீழ்ச் சொல்லப்பட்ட ஸகலத்திற்கும் ஆஶ்ரயமாயும், ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை உடையதுமான இந்த ஆத்மாவையும் வேண்டேன். கைங்கர்யாநுபயுக்தமான பொருளில் தமக்குள்ள அருசியைக் காட்டுகிறபடி. இல்லாவிட்டால், ஸ்வஸ்வரூபத்தை வேண்டேனென்றும் அது உரு மாய்ந்துபோகவேண்டுமென்றும் சொல்வது அநுபபந்நமாகுமன்றே? 'நிரவயவனும் நித்யனுமுள்ள ஆத்ம வஸ்து நாஶமாகிறதாவது கைங்கர்யத்திற்கு விருத்தமாயுள்ள அவஸ்தையின் நிவர்த்தநமே' என்று ஸ்ரீ நிகமாந்தார்யன் அநுக்ரஹித்திருக்கிறார்.

அந்யத்கிஞ்சித் ந ஸஹே - மற்றை எதையும் வேண்டேன். 'அந்யத்' என்னும் பதம் புத்ர மித்ராதிகளைக் குறிக்கின்றது. கீழ்ச் சொன்னபடி ஆத்மா முதலியவையெல்லாம் அஸஹ்யமானல், புத்ர மித்ர க்ருஹ க்ஷேத்ராதிகளெல்லாம் தூரதோ நிரஸ்தங்கள் என்பது குறிப்பு.

தத்ஸர்வம் ஸதயா விநாஶம் யாது - இவையெல்லாம் உருமாய்ந்து போக வேண்டும். கைங்கர்யத்திற்கு உபயுக்தங்களான ஸாமக்ரிகள் உண்டாவது ஈஸ்வர க்ருத்யம்போல, அநுபயுக்தங்களானவை நிவ்ருத்திபடைவதும் ஈஸ்வரக்ருத்யம் என்பதை இந்த வேண்டுகோளால் த்யோதிப்பிக்கிருர்.

ஹே யதூத்தம! இதம் விஜ்ஞாபநம் ஸத்யம் - மதுவென்னும் மஹாஸுரனை ஸம்ஹரித்த பகவானே! இது ஸஹ்ருதயமான விஜ்ஞாபநம். இப்படிப்பட்ட ப்ரபல விரோதி நிரஸநத்தில், மதுமதநம் செய்தவனே க்ஷமனுவான் என்பது தாத்பர்யம்.

'தேஹம் வேண்டேன், ஆத்மா வேண்டேன்' இத்யாதியாகச் சொல்வதும் லோகத்திலே கேள்விப்படத் தகுந்ததோ? இது மெய்யாகுமோ? என்னும் ஶங்கையை "ஸத்யம்" என்னும் ஶபதத்தால் நிவ்ருத்திக்கிருர். 'இது அஹ்ருதயமாகச் சொன்னதன்று; மெய்யே' என்பது தாத்பர்யம். "நான் பொய்சொன்னேனுகில், உமக்குப் பொய்யனுன மது பட்டது படுகிறேன்" என்பது ஸ்ரீ பிள்ளையின் ஹ்ருதயங்கமமான தாத்பர்ய விவரணம்.

'சஸத்யம், இதம் விஜ்ஞாபநம்' என்று ப்ருதக்காக அந்வயிக்கலாமென்றும், அப்பொழுது 'இதம் விஜ்ஞாபநம்' என்பதற்கு 'தயநீயனுன நான் செய்யும் விஜ்ஞாபநத்தை ப்ரஸாதத்துடன் திருச்செவி சாற்றியருளவேணும்' என்று தாத்பர்யமென்றும் ஸ்ரீ நிகமாந்தார்யன் திருவுள்ளம் பற்றுகிருர்.

இப்படிச் செய்த விஜ்ஞாபநத்தின் கருத்து என்னவென்றுல், முமுக்ஷுக்களாயுள்ள பகவத் பக்தர்கள், பகவத் கைங்கர்யத்திற்கு அநுபயுக்தமான ஸகல பரிக்ரஹத்தையும் விடவேண்டும் என்பது தான்.

ஸ்ரீ. வாஸுதேவதாஸன்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## குருபரம்பராநுஸந்தாந க்ரமம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸமீபத்தில் வெளிவந்த தீபிகையில் 'நிபுண நிரூபகர்' எழுதியதைப் பார்த்தேன். இந்த விஷய விசாரத்தின் மூலமான உபந்யாஸத்தில், ஆரோஹண க்ரமத்தில் அப்ராமாண்ய ஶங்கை தோன்றும்படி எழுதியிருந்தபடியால், அதன் ப்ராமாண்ய நிரூபணம் செய்ய, தததபிமாநிகளுக்கு ஆவஶ்யகதை நேர்ந்தது.

நிபுண நிரூபகரின் லேகநத்தைப் படிக்கும் பத்ரிகாபிமாநிகள் அடியேனுடைய லேகநத்தையும் ஒரு தடவை மறுபடியும் படித்துப் பார்க்க ப்ரார்த்திக்கிறேன்.

ரஹஸ்யாம்நாய வசநத்தில் 'ஆசார்ய வம்ஶ:' என்பதிலுள்ள ஆசார்ய பதம் ப்ரதமமோ வரமமோ ஒரு அவதியின் ஆகாங்க்ஷையைப் பூர்த்தி செய்கிறதென்பது இரண்டு பேருக்கும் ஸமாநம். 'ஆஸமவத்' என்பதும் அப்படியே. இவ்விடத்தில் ஜ்ஞேய ரூபமாக சொல்லப்படுகிறது ஆசார்ய வம்ஶமாகையால், ஆசார்ய வம்ஶ பதம் அவஶ்ய வக்தவ்யமாய்த் தீர்ந்திருக்கிறது. 'ஆஸமவத:' என்பது இல்லாவிட்டால் ஆசார்யர்களுக்குள் ஒவ்வொரு வ்யக்தியையும் இவர் இவர் என்கிற க்ரமத்தில் அநுஸந்தித்து, இந்த ரீதியில் ஆசார்ய வம்ஶம் அநுஸந்திக்கக் கடவது என்று வசநார்த்தம் ஏற்படுகிறது.

இவ்விடத்தில் வம்ஶமாவது, வித்யாவம்ஶ பரம்பரை. அதாவது: வித்யோபதேஶம் செய்த அநேகர் அடங்கிய ஒரு வரிசை. 'ஆசார்ய வம்ஶ' என்று தனித்தனியாய் அநுஸந்திக்கும்படி விதித்திருப்பதால், அவ்வரிசையில் 'எது முதல் எது வரையில்' என்று இரண்டு ஆகாங்க்ஷைகள்

உண்டாகின்றன. இவற்றில் அஜ்ஞாத விஷயத்தில் ப்ரதமாவத்யாகாங்க்ஷை ப்ரதமதஃ ப்ராப்தமாவது ஸர்வலோகாநுபவ ஸித்தம். 'சைத்ரமேவ ஸேவ' இத்யாதிகளில் போலே ஸஸம்பந்திகார்யங்களான ஆசார்யாதிகளுக்கு ஸ்வஸம்பந்தித்வம் தோன்றுவதும் ஸ்வரஸதஃ ப்ராப்தம். ஆகையால் இவ்விடத்திலும் ப்ரதம ப்ராப்தமான ப்ரதமாவதி விஷயகாகாங்க்ஷையானது ப்ரதமோபஸ்திதாசார்ய பத வாச்ய ஸ்வாசார்யர்களுக்குள் அத்யந்த ஸந்நிக்ருஷ்டரான ஸ்வாசார்யனை அவலம்பித்து, ஆசார்ய, பதத்தால் ஶாந்தையாகிறபடியால், 'கிம்பர்யந்தம்?' என்கிற உத்தராவத்யாகாங்க்ஷை நிற்க, அதைப் பூரிப்பது 'அஸ்மத்குருப்ய:' என்பது என்கிற அபிப்ராயத்தால் அடியேன் முன் எழுதினது.

ஶாஸ்த்ரஜ்ஞரான முதல் லேககரைக் குறித்து ஸங்க்ரஹமாய் அடியேன் எழுதியிருந்ததில், நிபுணதம நிருபணம் செய்திருந்தால், நிபுண நிருபகருக்குத் தர்க்க ஸம்பந்தாதிகள் போட இடமிராது.

'அநுஸந்தாநத்தில் ஸர்வேஶ்வரன் சரமாவதியானாலும் சரமாசார்யத்வேந அநுஸந்தாநமில்லாமையால் இந்த ஸ்ரீ ஸூக்திக்கு ஆஹார்யாநுஸந்தாந போதகத்வ கதநமே மிகவும் பாதகமாம்' என்று நிருபித்தது நிபுணமாகவில்லை. 'தேவதத்தன் அவ்வூரளவும் செல்லக் காணவேணும்' என்கிற வாக்யத்தில், அடியேன், தமிழ்ப் பண்டிதர்களிட மிருந்து தெரிந்துகொண்டபடி தேவதத்தனின் செல்லுகைக்கு அவ்வூர் கடைசீ எல்லை யென்றும், மற்றவனுடைய காணுகையில் அதுவும் சேருகிறதென்றும் தோன்றுகிறபடியால், ப்ரக்ருதத்தில் அந்த த்ருஷ்டாந்தத்தால் ஏற்படுகிறது யாதொன்றுமில்லை.

'இது உபலக்ஷணம்', 'இது ஆக்ஷிப்தம்', 'இது அர்த்த ஸித்தம்', 'இது ஸூசிதம்' என்று எழுதுவோர்க்குக் கண்டோக்த விஷயத்திலும் ஶாஸ்த்ரார்த்த வ்யவஸ்தை செய்வது துஷ்கரமாய்த் தீரும்.

'வேங்கடேஶ:' என்பதிலுள்ள ஜ்ஞாநமே அநுஸந்தாநரூபமென்று வ்யாக்யாநங்களில் விஶதமாயிருக்க, அதையே ஸ்ரீ தேசிகனும் அருளிச் செய்திருக்க, கேவல ஜ்ஞாநம் அர்த்தமென்று நினைத்து மூலஶிதிலமான இதைத் திருஷ்டாந்தப்படுத்திக்கொண்டு ஆர்த்திகார்த்தகதந வாதத்திற்குப் புறப்படுவது சுவரில்லாத சித்ரமன்றோ?

ரஹஸ்யாம்நாய ஶ்ருதிரூப ப்ரமாணம் என்று காட்டுகைக்காக 'விதிக்கப்பட்டது' என்று சொல்லாமல் 'ஓதப்பட்டது' என்று அருளிச் செய்யப்

பட்டிருக்கிறது. 'ஸ்ரூயதே' என்கிற அர்த்தத்தில்தான் 'ஓதுகை'யை உபயோகப்படுத்துவது மிக்கவாறும் உள்ளது என்று தமிழ்ப் பாஷா நிபுணர் சொல்லக் கேட்கிறோம். இவ்விடத்தில் வ்யாக்யானங்களிலும் இவ் விதமே காண்கிறோம்.

ஒரே க்ரந்த கர்த்தாவின் க்ரந்தங்களில் கண்டோக்தமாய்ப் பரஸ்பர விருத்த வாக்யங்கள் இருந்தால் மாத்ரமே [illegible] விரோத பரிஹாரம் செய்யக் காணுகின்றோம்.

"பகவானையும் ஸ்வாசார்யனையும் சேர்த்துச் சொல்லுமிடத்தில் அல்லவோ, அநுஸந்தானத்தில் ஆரோஹண க்ரமமா? அவரோஹண க்ரமமா? என்னும் விசாரத்துக்கு அவகாஶம்? அப்போதன்றோ க்ரம நிர்ணயசமான ரஹஸ்யாம்நாய வசநம் ப்ரவ்ருத்திக்கும்?"

'இதனால்.........உத்தோத்தரங்களாயின' என்றும், "வ்யக்தி விஶேஷ நிர்த்தேஶ பூர்வக குருபரம்பராநுஸந்தான ஸ்தலத்தில் மாத்ரமே, 'ஸ்வா வஸாவித்ய ஹமவந்தூ' என்னும் வசநம் க்ரம நிர்ணயார்த்தம் ப்ரவ்ருத்திக்குமாகையால் ஸமுதாயரூபேண நிர்த்தேஶித்தவிடத்தில் ஔசித்யாநுஸாரியான இச்சையே நியாயமிகை என்று கொள்ளவேண்டி யிருப்பதால், 'ஐக்ஷீநாய ஸரோஹா' என்கிற ஸமுதாய நிர்த்தேஶ ஸ்தலத்திலுள்ள க்ரமத்தை எந்தப் பக்ஷத்திற்கும் ஸாதகமாகவோ பாதகமாகவோ ஸ்வீகரிக்க ந்யாயமில்லை" என்றும் அடியேனுடைய பூர்வ லேகநம்.

இதற்கு, 'ஜெவாயிநாய' ஸ்லோகமும் 'ஆஹமவந்தூ' ஸ்லோகமும் ஒருவிதத்திலும் பாதகமாக ந்யாயமில்லையே. [illegible] அநுஸந்தித்தால் அவரோஹண க்ரமந்தான் என்று அடியேன் சொல்லவில்லையே. ஸ்வாசார்யன் முதல் ஸர்வேஶ்வரன் வரையில் ப்ரத்யேகாநுஸந்தானத்தில் ஆரோஹண க்ரமம்தான் என்றே அடியேனுடைய வாதம். '[illegible]', '[illegible]' என்று எழுதும் ஸமஸ்க்ருத நடையை அநுஸரித்து, நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலும் காணுவது போல், கீழ் ஹேதூபந்யாஸம் செய்துவிட்டு, 'இதனால் உத்தோத்தரங்களாயின' என்று அடியேன் எழுதி யிருப்பது, 'மநஸ்ஸில் பட்ட அர்த்தத்தை மழமழப்பினது போல் காண்கிறது' என்று லேககர் எழுதக் காரணம் ஊஹமாயிருக்கிறது.

50 சாமான்கள் இனாம் !! 50 சாமான்கள் இனாம்!!

## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

# ராஜ சுந்தரி ரோஜா.

## கூந்தல் வளரும் பரிமளத்தைலம்.

**50 இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபா 1—0—0**




தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரிகளும், தலை மயிர் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிற ஸ்திரிகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக் கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுராதார முடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும் சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டுப்புண் மயிர்வெடிப்பு, மயக்கம், தலைவலி, சொறிசிரங்கு மனோ வியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்யமடை தரும் இதுஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1. ரவிவர்மா படங்களுள்ள போஸ்டு கார்டுகள் 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள அந்தமான புரூக்ஸ் 1. ஆக 50.



## சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

**விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!**

**குணமில்லாவிட்டால்**

**ரூபாய் 100 - இனாம் கொடுக்கப்படும்!!!**

விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

டசன் 1-க்கு ரூ. 5 0 0.

**விலாசம்:—வி. எ. எஸ். பாணி,**

**நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.**

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

## மதிராஸ்.

### 1917-18-ம் வர்ஷத்திய எக்ஸிக்யுடிவ் போர்ட்

மெம்பர்களின் பெயர்.

1. ஸ்ரீ. உப. கெ. ஸ்ரீநிவாச ஐயங்கார்; } போஷகர்கள்
2. ஆனரெபில் கெ. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் }
3. ஸ்ரீ. உப. திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யர்—ஸபாத்யக்ஷர்.
4. „ ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார். } ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.
5. „ டி. ராஜகோபாலாசார்யா. }
6. „ எஸ். வாஸுதேவாசார்யர். } கார்யதர்ஶிகள்.
7. „ டி. கோதண்டராம ஐயங்கார். }
8. „ வி. ராஜகோபாலாசார்யா, சித்தூர்.
9. „ டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10. „ டி. அநந்தாசார்யர், விழுப்புரம்.
11. „ குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி.
12. „ வே. ஈ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
13. „ டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர்.
14. „ ஆர். நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
15. „ கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்
16. „ வி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி.
17. „ டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.
18. „ வி. ரங்காசாரியர், திருவல்லிக்கேணி.
19. „ என். ரங்கஸ்வாமி அய்யங்கார், கர்னூல்.
20. „ எம். நரஸிம்ஹாசார்யர், நெல்லூர்.
21. „ வி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.
22. „ டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், கோயம்புத்தூர்.
23. „ என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.
24. „ எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.
25. „ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாகப்பட்டணம்.
26. „ பி. கே. கருடாசார்யர், மைசூர்.
27. „ பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர்.
28. „ டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
29. „ எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.
30. „ எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர்.
31. „ வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசாரியர், மைஸூர்.
32. „ வி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.
33. „ வி. பத்மநாப ஐயங்கார், மயிலாப்பூர்.
34. „ ஆர். கிருஷ்ணமாசார்யர், மயிலாப்பூர்.